

நீலகிரி மாவட்ட தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் கிறிஸ்துமஸ் விழா மாவட்ட கழக அலுவலகம், உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அமைப்பாளர் அன்வர் அப்துல்லா தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக் கலந்துகொண்டு கேக் வெட்டி, சிறு குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கி அனைவருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை தெரிவித்தார். நிகழ்ச்சியில், மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, உதகை தெற்கு ஒன்றிய செயலாளர் பரமசிவன், பொதுக்குழு உறுப்பினர் பில்லன், உதகை நகரமன்ற தலைவர் வாணீஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ராஜா, காந்தல் ரவி, எல்கில் ரவி, ரஹமத்துல்லா, செல்வராஜ், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் முபாரக், துணை தலைவர் ஜப்ருல்லா, துணை அமைப்பாளர்கள் மேத்யூஸ், சாதிக், செல்வராஜ், பாபுலால், கில்பர்ட், உதகை நகர துணை செயலாளர் ரீட்டாமேரி, நகர பொருளாளர் அணில்குமார், தொமுச கவுன்சில் செயலாளர் ஜெயராமன், அணிகளின் துணை அமைப்பாளர்கள் நாகராஜ், ரமேஷ், கஜேந்திரன், ராஜ்குமார், கோபால், தியாகு, அமலநாதன், ராமன், ஆட்டோ பாபு, மார்கெட் ரவி, உதகை நகரமன்ற உறுப்பினர்கள் விஷ்னு,திவ்யா, உதகை தெற்கு ஒன்றிய துணை செயலாளர் ஈஸ்வரன், மாவட்டப் பிரதிநிதி சத்தியநாதன், கழக நிர்வாகிகள் குண்டன், காளி, ஜெரி, பரமேஸ்வரி, மனோகரன் மற்றும் கழக நிர்வாகிகள் தரளாக கவந்து கொண்டனர்.

### பட்டியல் இன மக்களுக்கு அரணாக இருக்கும்

# ‘திராவிட மாடல்’ அரசுக்கு எதிராக பொய்ப் பிரச்சாரம் செய்வதா?

### தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி. பிரிவு மாநிலத் தலைவர் எம்.பி. ரஞ்சன் குமார் கண்டனம்!



சென்னை, டிச.27 -

“பட்டியல் இன மக்களுக்கு அரணாக இருக்கும் திராவிட மாடல் அரசுக்கு எதிராகப் பொய் பிரச்சாரம் செய்வதா? என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி. பிரிவு தலைவர் எம்.பி. ரஞ்சன் குமார் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கு என்றுமே அரணாக நிற்பது திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே. மற்ற மாநிலங்களை ஒப்பிடும் போது பட்டியலின மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்திருப்பது தமிழ் நாட்டில் மட்டுமே என்ற தரவுகள் பெருமை தரக்கூடியதாகும்.

உயர் நீதிமன்ற நீதிபதி என்றாலே உயர் சாதியினர் மட்டும் தான் என்றிருந்த நிலையை மாற்றியது கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசு தான்.

1974 ஆம் ஆண்டு பட்டியலினத்தைச் சேர்ந்த அ. வரதராஜனை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக பரிந்துரைத்தவர் அன்றைய முதலமைச்சர் கலைஞர் தான். பின்னர் அவர் உச்ச நீதிமன்ற நீதிபதி பதவி வரை எட்டினார். இதற்கு ஒரே காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் தான். உச்சகட்டமாக, அனைவரும் அர்ச்சகராலாம் என்ற சட்டத்தை கலைஞர் கொண்டு வந்தார். அதனைச் செயலுக்கு கொண்டு வந்தவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

கோயிலுக்குள்ளேயே நுழைய முடியாமல் இருந்த பட்டியலின மக்கள், இன்றைக்குக் கோயில் கருவறைக்குள் சென்று பூசை செய்வதற்கு திராவிட மாடல் அரசே காரணம்.

ஆதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூகப் பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சிக்காக கடந்த 3 ஆண்டுகளாக பல்வேறு திட்டங்களைத் திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது.

தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் தமிழ்நாடு மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் அமைக்கப்பட்டது.

இந்த ஆணையத்தின் மூலம் இதுவரை 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டு, 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் துரித மின் இணைப்புத் திட்டத்தின் கீழ் மின் இணைப்புப் பெற 90 சதவீதம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

சாதி வேறுபாடுகளற்ற மயானங்களைப் பயன்பாட்டில் கொண்டிருக்கும் முன்மாதிரி சிற்றூர்களுக்கு ஊக்கத்தொகையாக அரசு சார்பில் ரூ.10 லட்சம் வழங்கப்படுகிறது. அரசின் நடவடிக்கை காரணமாக, ஆதிதிராவிடர் பள்ளி மாணவர்களின் தேர்ச்சி விகிதம் அதிகரித்து வருகிறது.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தைச் செயல்படுத்தி, ஒடுக்கப்பட்ட மக்களை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் வகையில் கடனுதவியை தமிழ்நாடு அரசு செய்து வருகிறது.

அருந்ததியின மக்களுக்கு உள் ஒதுக்கீடு வரை, சமூக நீதியை நிலைநாட்டுவதில் என்றைக்குமே திராவிட முற்போக்குக் கழகம் பின்வாங்கியதில்லை என்பது தான் வரலாறு.

3 பட்டியலினத்தைச் சேர்ந்தவர்கள் என, அதிகபட்சமாக அமைச்சர்களாக நியமிக்க ப்பட்டது, காமராஜர் ஆட்சிக்குப் பிறகு இப்போது தான். அதில் ஒருவருக்கு உயர் கல்வித்துறை அமைச்சர் பொறுப்பு வழங்கியது சமீப காலங்களில் நிகழாத ஒன்று.

எல்லாவற்றுக்கும் மேல், பட்டியலினத்தைச் சேர்ந்த முருகானந்தம் தமிழ்நாட்டின் தலைமைச் செயலராக நியமிக்கப்பட்டு, அவரும் சமூக நீதியை கட்டிக்காக்க சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

சமீபத்தில், பட்டியலினத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஆம்ஸ்ட்ராங்கை சென்னை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினராக நியமித்த திராவிட மாடல் அரசின் நடவடிக்கை, முதல மைச்சர் மு.க.ஸ்டாலினின் சமூக நீதிப் பார்வையை வெளிப்படுத்துகிறது

இவ்வாறு உயரிய பொறுப்புகளுக்கு பட்டியலினத்தவர்களை நியமித்து அதிகாரத்தை வழங்கி வருகிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். ஆனால், இவற்றையெல்லாம் வேண்டுமென்றே தவிர்த்து விட்டு, அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு, பொத்தாம் பொதுவாக திமுக அரசு மீது குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன. இது தவறு என்பதற்கான சான்றுகளே மேலே உள்ளவை.

பட்டியலின மக்களுக்கு எதிராக தமிழ்நாட்டில் கொடுமைகள் நிகழ்த்தப்படுவது போன்ற பொய்த் தோற்றத்தை ஏற்படுத்த முயற்சிகள் நடக்கின்றன.

நிலைமை இப்படியிருக்க, அனைவருக்குமான அரசாக செயல்படும் திராவிட மாடல் அரசுக்கு எதிராக பாஜகவின் குரலை சிலர் இங்கு பிரதிபலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லாவற்றையும் தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்பழுக்கற்ற அரசுக்கு எதிராக அவதூறுகள் தொடர்ந்தால், தமிழ்நாட்டில் பாஜகவுக்கு ஏற்பட்ட நிலைமை தான் இவர்களுக்கும் ஏற்படும்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## 48 வது சென்னைப் புத்தகக் காட்சி

# “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் தலைமைக் கழக வெளியீடுகள்!

**48வது சென்னைப் புத்தகக் காட்சி, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் (நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி அருகில்) 2024 டிசம்பர் 27 முதல் 2025 ஜனவரி 12 வரை நடைபெறுகிறது.**


**புத்தகக் காட்சி அரங்கில், அரங்கு எண்: 392ல் அமைந்துள்ள “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் திராவிட இயக்க நூல்கள் உள்ளிட்ட தலைமைக் கழக வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும்.**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**



விழுப்புரம் மாவட்டம் ஒலக்கூர் ஒன்றியம் மோட்டூரில் ரூ 28.08லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 2 கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை முதலமைச்சர் காணொளி மூலம் திறந்து வைத்ததை அடுத்து பள்ளியில் நடைபெற்ற விழாவில் ஆரணிபாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தரணி வேந்தன் தொடங்கி வைத்து பள்ளி குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினார்.உடன் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர், ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம், துணை சேர்மன் ராஜாராமன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சரவணகுமார், சிவகுமார் உள்ளனர்.

# இசைமுரசின் புகழ் என்றும் நிலைத்து நிற்கட்டும்!



இசை முரசு நாகூர் ஹனிபா அவர்கள், இராமநாதபுரம் மாவட்டம் வெளிப்பட்டிணத்தில் 1925 டிசம்பர் 25ல் பிறந்தார். முஹம்மது இஸ்மாயில் - மரியம் பீவி தம்பதியருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தவராவார். இவரது தாயார் வெளிப்பட்டிணத்தைச் சேர்ந்தவர். பாட்டனார் (அம்மாவின் அப்பா) முத்து ராவுத்தர் இராமநாதபுரம் அரண்மனையில் ஆயுதக் கிடங்கு பாதுகாவலர் - பராமரிப்பாளராகப் பணியாற்றினார்.

இஸ்மாயில் முஹம்மது ஹனிபா என்பது அவரது இயற்பெயர். தந்தையின் பூர்வீகம் நாகூர் என்பதால் அவரது பெயரோடு நாகூரும் சேர்ந்து கொண்டது.

இவரது 11-ஆம் வயதில் பள்ளிக்கூட மாணவராக இருக்கும் போது பாடினார். அவருடைய 13-ஆம் வயதில் திருமண வீடுகளில் பாடினார். 15-ஆம் வயதில் பக்க வாத்தியங்களுடன் மேடைக்கச்சேரிகள் செய்துள்ளார்.1941-ஆம் ஆண்டு தேரிழந்தூரில் ஒரு திருமணத்தில் பாட இவரை அழைத்தார்கள். பக்க வாத்தியங்களுடன் இவரது முதல் மேடைக் கச்சேரி இதுவாகும். அப்போது இவருக்கு 15 வயது. இவரது முதல் வெளியூர் கச்சேரியும் இதுவே. இவர் பணம் வாங்கிக் கொண்டு செய்த முதல் கச்சேரியும் அதுதான். 25 ரூபாய் கொடுத்தார்கள்.

தமது பதினெட்டாம் வயதிலேயே தலைவர் கலைஞர் அவர்களோடு நெருக்கமான நட்பினை கொண்டிருந்தார்.

நாகூருக்கும் திருவாரூருக்கும் இடையே இருந்த தூரம் மிகக் குறைவானது… அங்கு உள்ள ஓ டம்போக்கி ஆற்று மணலில்… கலைஞர் தொடங்கி திராவிட இயக்க உணர்வு கொண்ட பற்றாளர்கள் ஒன்று கூடி மாலை நேரங்களில் பேசி கலைவது வழக்கமாகவே இருந்தது.

அத்தகைய நண்பர்களின் கூட்டம் தான் தந்தை பெரியாரை, பேரறிஞர் அண்ணாவை, பட்டுக்கோட்டை அழகிரியை அவர்களிடையே அறிமுகம் செய்து வைத்தது.

அ ன்றைய இளைஞர்களிடம் திராவிட இயக்கத்தின் அறிமுகம் மொழிப் பற்றுதலையும், ஈடுபாட் டையும் தமிழ் ஆர்வத்தையும் ஏற்படுத்தி வைத்தது.

தந்தை பெரியார் சீர்திருத்த இயக்கம் நடத்தி பல்வேறு பகுதிகளுக்கு சென்று பிரச்சாரங்களில் ஈடுபட்டார்.

திருச்சி தஞ்சை பகுதிகளுக்கு செல்லும் போது நாகூர் ஹனிபா அவர்கள் தந்தை பெரியாரின் பிரச்சாரங்களில் பங்கேற்றுக் கொண்டு திராவிட இயக்கம் தொடர்பான பாடல்களை பாடி வந்தார்.

1949 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ஆம் நாள் திமுக கழகம் தோன்றிய நாள் முதற்கொண்டு அதன் உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்டார்.

தி மு கழகம் தொடங்கிய காலம் முதற்கொண்டு வட்ட மாவட்டஅளவில் பல்வேறு மாநாடுகள் நடத்தப் பட்டுக் கொண்டே இருந்ததன. அம் மாநாடுகளில் இசைமுரசு ஹனிபா அவர்களின் இசை நிகழ்ச்சிகள் தவறாமல் நடைபெற்றன.

தமிழைப் பற்றியும், கழகம் பற்றியும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா, தலைவர் கலைஞர் பற்றியும் பாடல்களைப் பாடும் போது மிகப்பெரிய அளவில் அதற்கு வரவேற்புகள் கிடைத்தன.

‘அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா’ என்று ஓங்காரக் குரல் எடுத்துப் பாடும் அந்தப் பாடல் மாநாடுகளில் பாடப்படும் போது… வெளியே நிற்கின்றவர்கள் கூட வேக வேகமாக ஓடோடி வந்து திடலில் அமர்வார்களாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சின்னமாகிய உதயசூரியன் சின்னத்தை ….ஓடி வருகிறான் உதயசூரியன், உள்ளமெல்லாம் இன்ப வெள்ளம் பொங்கவே ஓடி வருகிறான் உதயசூரியன் என்று பாடி உதயசூரியன் சின்னத்தை அனைவரிடமும் கொண்டு போய் சேர்க்கின்ற பணியில் அயராது உழைத்தார்.

1954 ஆம் ஆண்டு ‘கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே’ என்கிற அற்புதமான பாடலை அவர் பாடி, கலைஞரின் புகழுக்குப் பெருமை சேர்த்தார்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் மறைந்த போது அவர் பாடிய தமிழ் மணக்கும் திசையெல்லாம் தேடினேன் உன்னை

சான்றோர்தம் அவையெல்லாம் அலைய விட்டேன் கண்ணை….

கமழ்கின்ற பைந்தமிழே காவியமே அண்ணா…. கண்கலங்கக் கதற விட்டுச் சென்றனையோ அண்ணா…

எங்கே சென்றாய்….

நீ எங்கே சென்றாய்….

இதயத்தின் தீபமே எங்கே சென்றாய்…

எங்களை ஏங்க வைத்து எங்கே சென்றாய்…. என்கிற பாடல் பட்டி தொட்டி எங்கும் அண்ணாவை நினைத்து கண்ணீர் சிந்த வைத்தது.

தந்தை பெரியாரிடம்…. கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்களிடம்…. நெருக்கமான அன்பையும் பாசத்தையும் கொண்டிருந்தார்.

பேரறிவாளர் அவர்….

பெரியார் எனும் ஈவெரா…

யார் அறிவார் பெருமை…

தமிழா

வீரராம் ஈவெராவே…

தமிழா….

வீரராம் ஈவெராவே…

என்று தந்தை பெரியார் புகழ் பாடி கிராமங்கள் பல சென்று பாடி நின்றார்.

நாட்டின் இரு கண்கள்….நல்லவர்கள் போற்றும் வல்லவர்கள் இவர்கள் …

என்று பேரறிஞர் அண்ணாவையும் கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்களையும் புகழ்ந்து பாடி நின்றார்.

அவர் பாடிய

வாழ்க திராவிட நாடு….

வாழ்க திராவிடம் வாழ்கவே…

தொல்லைகளுக்கிடையே முல்லை சிரிப்பு….

தமிழகத்தின் தவப்புதல்வன் …

தரணி போற்றும் செயல் வீரன்… அமுத வாஞ்சை நிறைந்த அன்னை.. அஞ்சுகத்தில் செல்வ மகன்… அண்ணாவின் தம்பி அவன்….

ஆறிலும் சாவு ….நூறிலும் சாவு… அஞ்சாமல் ஓடி வா..

அண்ணாவின் வழியில் பொன்னான கலைஞர் அழைக்கின்றார் ஓடி வா…

உன்னை அழைக்கின்றார் ஓடி வா.

முதலான பாடல்கள் மிகச்சிறப்புக்குரியவைகளாகும்.

கலைஞர் வசனம் எழுதி…. இசைச் சித்தர் சி எஸ் ஜெயராமன் அவர்கள் இசையமைத்த , நாம் என்கிற திரைப்படத்தில் நாடோடிப் பாடல் சாயலில் ஆன ஒரு பாடல் பாடுவதற்கு அவருக்கு முதன் முதலாக வாய்ப்பு கிடைத்தது.

நடிப்பிசைப் புலவர் கே ஆர் ராமசாமி அவர்கள் பாடிய பேரறிஞர் அண்ணாவின் ஓர் இரவு பட பாடல்களும் வேலைக்காரி பட பாடல்களும் இசை முரசு நாகூர் ஹனிபா அவர்களால் பல்வேறு மேடைகளில் பாடப்பட்டவை.

பாரதிதாசன் எழுதி… அவர் பாடிய தமிழுக்கும் அமுதென்று பேர் …அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்… என்ற பாடல் உலகத் தமிழர்கள் அனைவரையும் தமிழ் மொழியின் பால் பற்று ஏற்படச் செய்தது.

எத்தனையோ ஆசை வார்த்தைகள் காட்டி அவரை… திமுக அரசியலை விட்டு மாற்ற பல பேர் முயன்றார்கள்.

அனைவருக்கும் தோல்வியே கிட்டியது.

புடம் போட்ட தங்கமாக திமுகவின் முன்னணி வீரராகவே அவர் திகழ்ந்தார்.

திமுக தேர்தல் அரசியலில் போட்டியிட வேண்டும் என்று முடிவு செய்த பின்னர் 1957-ஆம் ஆண்டு கழகம் சார்பில் நாகப்பட்டிணம் (சட்டமன்றத் தொகுதி)யில் போட்டியிட்டு வெற்றிவாய்ப்பை இழந்தார்.

திமுக மேடைகளில் இசை நிகழ்ச்சி கள் நடத்தும் பொழுது தொடக்க காலங்களில் தலைவர்களை இகழ்ந்து கூச்சலிடும் பேர்வழிகளை நேருக்கு நேர் எதிர் கொண்டு வெற்றி கண்டவர்.

திமுக நடத்திய போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்றவர்… சில போராட்டங்களினால் சிறை புகுந்தவர். கழகம் இட்ட கட்டளையை சிரமேற் கொண்டு செயல்பட்டவர் ஆவார் .

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாடு வக்பு வாரியத் தலைவராகவும் மக்கள் பணியாற்றி உள்ளார்.

இசை முரசு நாகூர் ஹனீபா நாகூரில் உள்ள தனது வீடுகளுக்கு “அண்ணா இல்லம்” “கலைஞர் இல்லம்” “காயிதே மில்லத் இல்லம்” என்று பெயர் சூட்டியிருந்தார்.

அவர் வாழ்ந்த காலம் எல்லாம் பெரியார் அண்ணா கலைஞர் முதலான தலைவர்களை நேசிக்கின்ற அடிப்படை தொண்டராகவே தன்னை அமைத்துக் கொண்டார்.

இன்றைய தமிழ்நாட்டு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் மீது மிக்க பெரும் பாசம் கொண்டவராகவே இருந்தார்.

ஏப்ரல் மாதம் எட்டாம் தேதி 2015 அன்று மறைந்தார். நாகூர் தர்காவில் உள்ள அடக்கத்தலத்தில் அவர் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

திராவிட இயக்கத்தை திமுகவை வளர்த்த முன்னோடித் தலைவர்களில் ஒருவராகப் பாடுபட்ட இசை முரசு நாகூர் ஹனிபா என்றும் போற்றப்படுபவர் ஆவார்.

அவரது நூற்றாண்டு பெருவிழா இந்த ஆண்டு தமிழ்நாடு அரசு சிறப்பான முறையில் கொண்டாடத் துவங்கி உள்ளது….

அவருடைய பெயர் நாகூரின் தெருவுக்கும்…. பூங்காவிற்கும் அமைக்கப்படுகின்றது என்ற செய்தி அவரை பெருமைப்படுத்துகிறது…இசை முரசு நாகூர் ஹனிபா அவர்கள் தன்னுடைய இசைப் பாடல்கள் மூலம் கழகக் கொள்கைகளை எடுத்து வைத்தார். அதனைப் பின்பற்றி என் போன்றவர்கள் அதே பாதையில் பேரூர் , சிற்றூர், நகரம், மாநகரம் இன்னும் மாநிலங்கள் தாண்டியும் கழகத்தின் கொள்கைக், கோட்பாடுகளை இசைப் பாடல்கள் வாயிலாக எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறோம். அனைவரும் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்ற மகத்தான நல்லிணக்கத்திற்கு பாடுபட்ட குரல் அவருடையதாகும்… அந்த குரல் எங்களை எல்லாம் வழிநடத்திக் கொண்டிருக்கிறது.

இசை முரசு அவர்களின் புகழ் என்றும் நிலைத்து நிற்கட்டும்.



**இறையன்பன் குத்தூஸ்**
**செயலாளர்**
**தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை**

# இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி!

புதுடெல்லி, டிச.27 -

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு வரலாறு காணாத வகையில் திங்களன்று (டிசம்பர் 23) 85.12 ஆக சரிந்தது. தொடர்ந்து [செவ்வாய் கிழமை] 1 டாலரின் மதிப்பு 85.18 ஆக இருந்த நிலையில், நேற்று முன்தினம் [புதன்கிழமை] மேலும் சரிந்து 85.41 ஆக உள்ளது. தொடர்ச்சியாக 6வது முறையாக இந்த சரிவு ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து கச்சா எண்ணெய் விலை உயர்வு, ரூபாயின் மதிப்பை வீழ்ச்சியடை யச்செய்து வருகிறது. அமெரிக்கக் கடன் பத்திரங்கள் அதிகரிப்பு மற்றும் இறக்குமதியாளர்களிடமிருந்து வலுவான டாலர் தேவை ஆகியவை இந்த வீழ்ச்சிக்குக் காரணம்.

மேலும் மாத இறுதியில் டாலரின் தேவை அதிகரித்தது மற்றும் அமெரிக்காவில் டொனால்டு டிரம்ப் நிர்வாகத்தின் இறக்குமதி வரி பற்றிய அச்சமும் இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு ஆறு மாதங்களில் இல்லாத அளவுக்குக் குறைந்துள்ளது. எதிர்காலத்தில் நிலையான ரூபாய் மதிப்பு சரிவு தொடரலாம் என்று வர்த்தகர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.



பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 51 வது நினைவு நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூரில் தந்தை பெரியாரின் திருஉருவப் படத்திற்கு கிழக்கு மாவட்டப் பொருளாளர் ஆர்.வி. ஸ்ரீராம் தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் தி.மு.க. நிர்வாகிகள், திராவிட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைப்படி பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழகம் சார்பில் ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் பி.பள்ளிப்பட்டி தூய மரியாள் தேவாலய வளாகத்தில் கிறிஸ்தவ சிறுபான்மையின மக்களோடு கேக் வெட்டி, குழந்தைகளுக்கும், பொது மக்களுக்கும் பரிசு பொருட்கள் வழங்கி கிறிஸ்துமஸ் பெருவிழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பி.பள்ளிப்பட்டி பங்கு தந்தை அருள்ஜோதி, ஊராட்சி மன்ற தலைவர் திருமலாதினேஷ், கிளைக் கழக செயலாளர்கள் ஜனா, இராஜேந்திரன், மரியம் சூசை உள்ளிட்ட கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.